# அன்பின் நாதம்




THE MADURA TAMIL SANGAM

இயற்றியவர்,
முத்துக்காமாக்ஷி யவர்கள்,
தலைவர்.
சன்மார்க்க தேசிய ஐக்கிய கலை ஞான சபை.
32, வாணியன் கிணற்று சந்து, திண்டுக்கல் ரோட், மதுரை.

THE MADURA

தமிழ் ... கம்

பரிசுத்திட்டம் ...........

பகுதி ...........

...........

வந்ததேதி... 6/3/80 ...........

# முன்னுரை.

மெய்யன்பர்களே! உண்மைக்கும் அன்பிற்கும் அதிக தொடர்புண்டு. உண்மையே கடவுள் என்றால் அன்பை அதன் சக்தி என்று சொல்லலாம், உண்மை வெளிகிளம்ப அன்பின் ஆதரவு வேண்டும். உடலில் உயிர் அசைவற்று உறங்கிக்கிடக்கலாம். சக்தி பிறக்கும்போதுதான் உயிர் வேலை செய்ய முடிகிறது. சக்தியும் சிவமும் ஒன்று. சிவமின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவமில்லை சிவசக்தியை தொடர்ந்து வேலை செயயத் தூண்டுவதே அன்பு. அன்பு இல்லையென்றால் உலக உற்பத்திக்குக் காரணமில்லை. சூன்ய நிலைதான் பிறக்கும் அன்பைக்கொண்டு பிறந்ததே சகல லீலா விநோத சிருஷ்டிகளும், அன்பு பாவிகளையும் இரட்சிக்கும் புனித வான்களையும் இரட்சிக்கும் சக்தி பெற்றது. தெய்வீக அன்பினால்தான் உலகம் காக்கப்படுகிறது அன்பு இல்லை என்றால் தாய் தான் பெற்ற பிள்ளையைக் காப்பாற்ற மனம் துணிய மாட்டாள். குழந்தை பிறந்த அன்றே அதைத் தூக்கி எறிந்து விடத்தான் சுயநலம் தூண்டும். அதை தடுப்பது தாய் அன்பான இயற்கை அன்பு. இது செயற்கை அன்பல்ல. மனிதர்களும், மிருகங்களும், பறவைகளும், பாம்பு, தேள், பூரான்போன்ற ஊர்வன நீர்வாழ்வன, பறப்பன, போன்றவைகளும் தங்கள் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றத் தயங்காது சுகதுக்கங்களையும் பொருட்படுத்தாது தங்கள் உயிரைக் கவரக்கூடிய எதிரிகளே வந்தாலும், அதை எதிர்த்து தங்கள் குழந்தைகளைப் பெரிதெனக்காக்க முன் வருவது தாய் அன்பான தெய்வீக இயற்கை அன்பே காரணம். ஆகையால், நாம் பிறந்த அன்றே நம்மைக் காப்பது தாயல்ல. தாயின் அன்புதான். அன்புகெட்ட தாய்மாரில் சிலர் தங்கள் குழந்தைகளை கொலை செய்யவில்லையா? எத்தனையோ நடக்கத்

தான் செய்கிறது. அன்புக்கு ஆயாசமில்லை. இரவு பகல் என்பது வுமில்லை, கஷ்ட நஷ்டம் என்பதுவுமில்லை, லாபம் நஷ்டம் என்பது வுமில்லை, காலநேரம் என்பதுவுமில்லை. அது எச்சமயத்திலும் தன் உதவியைப் பிறருக்கு உதவத் தயங்காது. அதுதான் உண்மை அன்பு, அல்லது தெய்வீக அன்பு என்றும் சொல்லலாம். அன்பு மிகுந்தோர்களை அல்லது அன்பின் பயிற்சியில் பூரண வெற்றி பெற்ற மாபெரும் புனித மனிதர்களை எந்த ஜீவராசிகளும் எந்த சந்தர்ப்பத்திலும் தீங்கு செய்வதில்லை. தீங்கு செய்யவும் முடியாது சுமார் 12 வருஷங்கள் எந்த ஜீவன்களையும் கொலை செய்யாது அதைக்காப்பது விரதமென அன்பு செய்து வெற்றிபெற்றால் அவன் கொடும் புலி கரடி சிங்கம் வேங்கை வாழும் இடத்திலும் வாசம்பண்ணலாம். ஒருவித பயமுமில்லை. இதைக்காட்டிலும் கொடிய தீயோர்களாலும் தீங்கு செய்யமுடியாது. பரிசுத்த அன்பு நிறைந்த உள்ளம் படைத்த ஆணோ பெண்ணோ இவர்களைச் சந்தித்த எந்தக்கடின சித்தமுள்ள மக்களும் இவர்களால் வசீகரிக் கப்பட்டு விடுவார்கள். இங்கு தாய் அன்புதான் தாண்டவமாடும். குழந்தைகளைப்போல் தங்களையே மறந்து விசுவாசமாக வார்த்தை யாடவும் பணிசெய்யவும் பிறரை மெய்யன்பு வசீகரிக்கும். வசீகரத்தன்மை மக்களுக்கு வேண்டுமானால் அதை அன்பின் மூல மாகத்தான் இலகுவில் அடையமுடியும். வசியநம சிவயநம நமசிவய யநவசிவ வயநமசி இவை எல்லாம் அன்பின் அடக்கம். அன்பு, அன்பு, அன்பு என்று தினம் ஆயிரம் பதினாயிரம் தடவைகூட உருவேற்றுங்கள். அதற்கு பலன் கைமேல்கிடைக்கும். அன்பு நம்மிடை வலுக்க, வலுக்க சாந்தம், பொறுமை, அஹிம்சை போதுமென்ற மன அமைதி ஆனந்தமெல்லாம் தொடர்ந்து ஏற்படும். அன்பின் வசீகரத்தால் மனிதர்களை மட்டுமல்ல, சகல ஜீவகோடி களும் வசீகரமாகும். அன்பு என்பது வெளித்தோற்றத்தில் சர்வ சாதாரணமாகவும் ஏதோ தாட்சண்ணியமாகச் செய்யவும் பேசவுங் கூடிய அற்பவிஷயமாகப்படலாம். இது அறிவில்லாதவன் நினைவு. ஆழ்ந்த அறிவுபடைத்த ஒருவன் நல்லவழியில் திரும்பிப் பேரானந் தத்தைத் தேடிப்பிடிக்க முயன்றால் அவன் காண்பது முதலில் அன்பு, இரண்டாவது உண்மை மற்றவை யாவும் அதன்பிறகுதான்

என்பதை அறிவான். சத்தியம் நம்மிடம் நிலைக்கவேண்டுமானல் அதற்கு அடிப்படையாக அன்பு இருக்கவேண்டும். கல்வி பயில வோ, பொருள்தேடவோ, புகழ்தேடவோ அல்லது ஞானம் அடையவோ அல்லது வேறு எதுவேண்டுமானுலும் சரி எதற்கும் அடிப்படையாக மக்கள் விரும்பும் எப்பொருள்மீதும் அன்பு உண்டாகவேண்டும். வெறும் ஆசை மட்டும் இருந்தால் போதாது. கஷ்டம் வநதால் ஆசை ஓடிவிடும் அன்பு ஓடாது. இதுதான் இதிலுள்ள வித்தியாசம் அன்பின் பிரிவாற்றுமையால் உடலையும் உதறித் தள்ளிய உயிர்கள் எத்தனையோ இவ்வுலகம் கண்ணுரக் கண்டும் இருக்கிறது, கண்டுகொண்டும் இருக்கிறது. அன்பு வல்லமை பெற்றுல் எதையும் லட்சியப்படுத்தாது. அன்பு ஒன்றுக்கே தன்னைத் தத்தம் செய்வாருமுண்டு. தன் கணவன் மீது உள்ள காரணமாக சில புனிதவதிகள் தன் கணவன் உடல் எறியும் சிதையில் நெருப்பையும் பொருட்படுத்தாது மனம் உகந்து அதில் புகுந்து எரிந்து வெந்து சாம்பலாகவில்லையா நெருப்பு என்ன சுடாமலும் எரிக்காமலுமா விட்டுவிட்டது? சுடத்தான் செய்தது எரிக்கத்தான்செய்தது. ஆனல் அன்பின் பலத்தை அதனுல் குலைத்து வெருட்டமுடியவில்லை. அன்பு நெருப்பிலும் வல்லமை பெற்றது. நெருப்புத் தன் சேஷ்டையைக் காட்டினுலும் அதை ஒரு பொருட்டாக மதியாத வீர மாதர்களை என்ன செய்யமுடியும். சமீபத்தில் சில தினங்களுக்கு முன்புதான் சைனவிலுள்ள ஓர் மாபெரும் புத்த மடத்தில் எக்காரணத்தைக் கொண்டோ பெரும் நெருப்பு பற்றிக்கொண்டு எறிய ஆரம்பித்து விட்டது. அப்போது மடத்தில் சுமார் இருபது பிட்சுக்கள் நெருப்பை அணைக்கமுடியாமல் மனம்நொந்து மடத்தின்மீது தங்களுக்குள்ள அன்பின் வேகத்தால் நெருப்பையும் பொருட்படுத்தாது அதனுட்புகுந்து புத்த மந்திரங்களை ஜெபித்துக் கொண்டு வெளியே வர மறுத்து உள்ளே உட்கார்ந்துகொண்டார்கள். நெருப்பு அவர்கள் அனைவோரையும் எரித்துவிட்டது. மடத்துத் தலைவர் வெளியே சென்றிருந்தாராம் அவர் இதைக் கேட்டு ஓடிவந்து நெருப்பில் தானும் புகுந்து சாகத்துணிந்தார். ஆனல் ஜனங்கள் தடுத்துவிட்டார்கள். அன்பர்களே அன்பின்

மகத்துவத்தைத் பாருங்கள். மடத்தின்மீது உள்ள அன்பு உயிரையும் உடலையும் பொருட்படுத்தவில்லை அந்த மடம் சுமார் 1700 வருஷங்களாக நடைபெற்று வருகின்றதாம் நெருப்பினால் சுமார் 15 லட்சம் பவுன் பெறுமான சாமான்கள் சேதமாகிவிட்டதாம். உடல் போனால் மறு உடல் பிறக்கும் உறுதிபோனால் என்னவரும்? பயமும் நடுக்கமும், அடிமைத்தனமும்தான் வரும் மானம் மரியாதை ரோசம் இல்லை என்றால் பிறர் உண்டு கழித்த எச்சிலையுங்கூட நக்க மனம்வரும். கேடுகெட்ட பொல்லாத மனம் பக்குவம் அடையவேண்டுமானால் நமக்குப் பிறரிடம் அன்பு பிறக்கவேண்டும். அப்போது கருணை உண்டாகும் அதன் சார்பில் ஈகை இடம் தரும். தருமம் நிலைக்கும். அன்பைக் கைவிட்டவர்கட்குக் கெதி மோட்க்ஷமில்லை. உயிர்களைக்காத்து ரட்க்ஷிப்பதே அன்பின் ஆர்வம். ஆகையால் இச்சிறுநூலைக் கண்ணுறும் அன்பர்கள் ஆசையுடன் படித்து இதில் கலந்து ஐக்கியப்பட்டு ஒன்றுசேர்ந்தால் மனிதன் தேவனாவன் தந்திர மந்திரம் தேவையில்லை என்பது எனது கருத்து.

மதுரை,
29—4—48.

இங்ஙனம்,
**M. A. M. சிவானந்தம்**

# அன்பின் நாதம்.

அன்புடையீர்! அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை வடிவாய் எங்கும் தயாபரனாய் எழுந்திலங்கும் அன்பின் கடலான எல்லாம்வல்ல இறைவன் இவ்வுலகத்திலுள்ள சர்வகோடி பிராணிகள் அனைத்திலும் அன்பு வடிவமாக அந்தப் பரமாத்மா குடிகொண்டிருக்கிறான் என்னும் உண்மையை நம்மக்கள் உணர்ந்து சர்வ பிராணிகளும் ஆண்டவனின் அருட்ஜோதி அன்பு உருவம் என்னும்எண்ணம் மக்கள் மனத்தே உதிக்கவேண்டுமாயின், மக்கள் மனதில் மோசமான சுயநல எண்ணங்கள் மக்களிடையே மறைய வேண்டும். அதேகாலத்தில் தெய்வீக அன்பின் எண்ணங்கள் மக்கள் மனதில் ஓங்கி வளரவேண்டும்.

உலகில் பெரியபெரிய மாறுதல்கள் க்ஷணத்திற்கு க்ஷணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் அற்ப எண்ணங்களை விட்டு ஒவ்வொரு மனிதனும் தன் மனதில் உயரிய எண்ணங்களையும் அன்பின் சிந்தனைகளையும் வளர்க்க முயலவேண்டும். இதுவே இக்கலிகாலக் கொடுமையிலிருந்து நம்மைக் காப்பாற்றும் அரிய பொக்கிஷம். பழி பாவங்களிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழியும் இதுவே, நம் மக்கள் அன்பின் பயிற்சியால் அருளொளிப் பேரோசையை எங்கும் முழக்கவேண்டும்.

பாவம் படுநாசத்தையும் பழியையும் கிலியையும் உண்டுபண்ணும். அன்பு நேசத்தையும் ஆதரவையும் நல்வாழ்க்கையையும் கொடுக்கும் மக்களே! அன்பினால் ஒன்றுபடுங்கள். அன்பைப்போல் ஆதரவு கொடுப்பதும் ஐக்கியத்தைப்போல் வலிமையைத் தருவதும் இவ்வுலகில் வேறொன்றுமில்லை. அன்பின் தரும நீதி நெறி விளக்கத்தாலேயே மக்களிடையே நல்வினை ஓங்கவேண்டும். நல்வினை செய்வோர் அருங்காரியம் செய்தவர்களாவார்கள். தீவினை செய்வோர் தீராத்துயரத்தை அடைவார்கள், மக்கள் பொதுவாய் பொதுநல உபகாரியாகவே வாழ்ந்தால் வாழவேண்டும். இல்லை

யேல் வாழ்வதிலும் வாழாமை மேல் மானிடராகிய நாம் மதி மோசம் போகாததற்கு உற்றவழி அன்பின் அரியவழியே சிறந்த வழி என்பதை எங்கும் பறைசாற்றுவோமாக. இப்பிரபஞ்சத்தில் மானிடர்களாகப் பிறந்த மனித வர்க்கமெல்லாம் ஒரே இனம், ஒரே குலம், ஒரே கடவுளின் மக்கள் என்னும் எண்ணம் மனிதர் கள் மனத்தில் உதயமாகுமாறல் உலகில் இன்பம் தானே தாண்டவ மாடாதா? ஆளப்பிறந்த நாம் அடிமைப்பட்டு அலேவானேன். பொல்லாச் சுயநலப்பேய் மக்களின் சுதந்திரத்தை அரித்துத் தின்றுவிடுகிறது. அன்பர்களே மனிதன் அன்பின வழியாகத் தான் பிறருடன் சேர்ந்து வாழமுடியும், வம்பிறலல்ல. அன்பின் விலாசமின்றி வாழ்வுக்குச் சிறப்பில்லே. அன்பும் அறிவும் ஒன்றே டொன்று கலந்து வேலே செய்யாவிட்டால் ஐக்கியமும் மானிட முன்னேற்றமும் சிதைந்துபோகும், மூர்க்கமே முதிர்ந்து வளரும். அன்பனே தன்னேப்போல் பிறரையும் நினே. உன் சுயநலத்தை மறந்து எல்லாம் நம் மக்கள் எலலாம் நம்முடையதே என்றும் பிறர் இன்பம் நம் இன்பம், பிறர் துன்பம் நமது துன்பம் என்னும் நினேப்போடுங்கூடி அன்பும் பரோபகாரமும் மக்கள் நேசமும் ஐக்கியமும் தியாகமும் மக்களிடையே பரவச்செய்வோமாறல் கேவலம் துன்பம் என்று ஒன்று இவ்வுலகில் ஏன் இருக்கும். துன்பம் இன்பமாய் மாறுதா? என்பதை எண்ணியாகிலும் பாருங்கள். எல்லோரும் சேர்ந்து இன்புற்று வாழ்தலே பேரின்பம். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை தொல்லேயையும் துயரையும் சோர்வையும் சோம்பலேயும் பயத்தையும் பசியையும் வறுமையை யும் தனிமையும் போக்கவல்ல சிறந்த மருந்து அன்பேயாகும். மக்கள் மக்களுடன் சேர்ந்து உறவு கொண்டாடுவதின் மூலம் தனி உயிர் விரிந்து பரவி உலகத்தைத் தன் உடைமையாக்கிக் கொள்ளும். இதனால் இது பிறரின்பம் தன் இன்பம் பிறர் செழிப்பு தன் செழிப்பு பிறர் அன்பு தன் அன்பு, பிறருடைமை தன்னுடைமை பிறர் வாழ்வு தன் வாழ்வு பிறரே தான் தானே பிறர் என்னும் ஐக்கியத்தின் ஆனந்த முடிவு நிலே நம்முள் தானே உதயமாகும். இதுவே உண்மையின் நிலே அல்லது மோட்ச நிலே எனவும் சொல்லலாம்.

பக்தி, முத்தி, சக்தி, வைராக்கியம், தியாகம், அஹிம்சை, பொறுமை, ஆதரவு, சகோதரத்துவம், சமத்துவம், பொது சேவை ஆசையின்மை ஆனந்தநிலை இவைஎல்லாம் கடல்போல் விரிந்து பரந்த அன்பின் மனத்தில்தான் ஜெனிக்கும். சூன்ய மனதில் சூன்ய நிலைதான் சூழ்ந்து பரவும். இருள் இருளைத்தான் காட்டும். அதில் வேறு எதையும் பார்க்கமுடியாது தடவி தட்டுக்கெட்டுத் தடுமாறி வீழ்ந்து அலையவேண்டியதுதான் அதன் முடிவு. உலகமே புண்ணியத்தில் ஜெனிக்கிறது பாவ புண்ணிய போராட்டத்தில் சுழல்கிறது முடிவில் அதன் பாவத்தின் வலிமையால் அழிகிறது. கடவுள் காப்பதைத் தவிர எதையும் அழிப்பதில்லை. மாய்கை எதையும் மாய்ப்பதைத்தவிர எதையுங் காப்பதில்லை. தர்மம் காக்கும் அதர்மம் அழிக்கும் என்பதே சுருக்கமான பொருள். உலக உற்பத்திக்கு மூலகாரணம் அன்பு. ஆகவே இவ்வுலக முன்னேற்றத்திற்கு ஐக்கியத்திற்கும் அடிப்படையாக உள்ள அன்பின் தத்துவத்தை உலகத்திற்கு உபதேசிப்பது மக்கள் கடமையாக இருக்கவேண்டும். இந்தத் தத்துவம் நம் தாய்நாடா கிய பாரதநாட்டில் தொண்றுதொட்டு பரவி நிற்பதால் அதன் வார்சுதார்களாகிய நாம் அன்பின் தத்துவம் உலகமெங்கும் பரவும் படியாகச் செய்யவேண்டியது நமது கடமை. இதை நம் மக்கள் செய்தாலொழிய உலகில் அன்பையும் ஐக்கியத்தையும் பலப்படுத்த வெகுகாலமாகும் தற்போது உள்ள அன்பின் அடியார்கள் கொடுமைகள் நிறைந்த இந்தச் சமயத்தில் அன்பினொலி வீர முழக்கத்துடன் வீரிட்டு உலகெங்கும் சென்று உலக மாய்கை இருளைப் போக்கவேண்டும் தற்போது உலகமே மாய்கையான வஞ்சக நவ நாகரீகச் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது. அதில் அடிமை வாழ்வும் சுயநலமும் துரோகச் சிந்தனையும் நம்பிக்கை மோசமும் பழி கொலைப் பாதகங்களும் சொல்லிமுடியாத அளவு பரவி இவ்வுலகமே தத்தளிக்கிறது.

இதில் ஒருபுரம் மக்கள் மனதில் சாந்தமும் சமாதானமும் ஐக்கியமும் ஆனந்த இன்பவாழ்வும் ஏற்படவேண்டும் என ஆசைப் படும் மக்கள் ஒரு சிலர் இருப்பதுவும் உண்மை இதற்கு அடிப்

படையாயுள்ள பரோபகாரச் சிந்தனையும் இதன் செயலும் ஏற்படாதவரை மக்களின் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் எப்படி உண்டுபண்ண முடியும்? மக்களிடை எது அவசியம் எது அவசியமில்லை எது மெய் எது பொய், எது நன்மை எது தீமை என அறியும் தன்மையையும் அதன் பலாபலன்களையும் மக்கள் உள்ளதை உள்ளவாறு உணர்ந்து நடக்கும் ஆற்றல் மக்களிடை ஏற்பட்டாலன்றி உலக முன்னேற்றம் ஏற்படாது. ஆகவே பரந்த நோக்கமும் விரிந்த எண்ணமும் உண்மைப்பற்றுதலும் தியாக புத்தியும் நுண்ணறிவும் படைத்த நன்மக்கள் பொதுமக்களிடையே வருந்தி உழைத்தாலன்றி மக்களின் பொதுநலத்தைப் பெருக்க முடியாது ஒரு பொருளின் உட்கருத்தை உள்ளதை உள்ளவாறு அறிவதே உண்மையான அறிவாகும். ஒரு பொருளைப்பற்றி அறிந்தால்மட்டும் போதாது. அதை நமக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும்படியாக அதை ஆக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். அதுவே ஆண்மை அல்லது உண்மை ஆற்றல் என்று சொல்லப் படும். நற்செயல் புரிவதும் அதை நற்பயனாக்கிக் கொள்ளுவதுமே விவேகத்தன்மையாகும், விவேகத்தை வளர்க்க உண்மையான மனது உண்மையான வாக்கு உண்மையான செயல் அத்தியாவ சியம் உண்மைக்காக உயிரையும் தியாகம் செய்யும் உத்தமர்கள் யாரோ அவர்களுக்கன்றி உண்மைநிலை அதாவது பரிசுத்த நிலை ஏற்படாது. உண்மையின் முழுவெற்றிபெற உயிரையே முதலில் பந்தயமாக வைக்கவேண்டும். தோல்வி என்பதே நமக்கில்லை என்பதை வைராக்கியமாகக் கொள்ளவேண்டும் வெற்றியா? அல்லது மரணமா என்பதுவே நமது முடிவாக இருக்கவேண்டும் வாழ்வையோ அல்லது தாழ்வையோ புகழ்ச்சியையோ அல்லது இகழ்ச்சியையோ ஒருபொருட்டாக மதிக்கவேண்டியதில்லை. உலகம் நமக்காகப் படைக்கப்பட்டதேயன்றி உலகத்துக்காக நாம் படைக்கப்படவில்லை என்ற நம்பிக்கைவேண்டும். ஆனால், நாம் எடுத்த உடல் அழியும். உயிர் அழியாது என்ற உணர்ச்சி வேண்டும். அப்போதுதான் நாம் கோரிய வெற்றிகிட்டும். வெற்றி வா வா என்றால்மட்டும் வந்து விடாது அதற்கான நினைப் பும், உழைப்பும், உறுதியும், தியாகமும் செயலில் இருக்க

வேண்டும். உழைப்புக்குத் தக்க ஊதியம். உழைப்பும் அதன் ஊதியமும் ஒன்றுக்கொன்று சம எடை உள்ளவைகளேயாகும். சிறிது உழைப்பில் அதிக ஊதியத்தை எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான்கிட்டும். இதில் ஏய்த்துவிடவும் முடியாது ஏய்க்கப்பார்ப்பவன் ஏமாறுவான் என்பதே நீதிகளிலொன்று. ஒருவன் நல்வினைப் பணியில் ஈடுபட்டு, படும்பாடுகள் வீணுவதில்லை. பாடுபட்டதற்குத் தக்கபடி பலன்கிட்டும். இகபர வாழ்வுக்கும் புனிதஉழைப்பே நிரந்தரமானது பலன்வீணுகாது. நன் மக்கள் புனிதமான உழைப்பில் இறங்கினுல்மட்டிலும் மக்களின் வாழ்க்கையை நேர்மைபடுத்த முடியும். அதற்கு அன்பேயே நமக்குறிய பிறவிச் செல்வமாகக் கருதி அதன்பணியில் ஐக்கிய நோக்கத்துடன் பாடுபடவேண்டும். அன்பே நம்பிடம்உள்ள வற்ருத செல்வம். அதை நாம் பிறர்க்குத் தானமாக வழங்கவழகை கருணையாகிய அருள்வெள்ளம் நம்மனத்தினிடை பெருக்கெடுக்கும். அருள்எண்ணம் மக்களிடை சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் உண்டுபண்ணும். அடிமைத்தனத்தை அடியோடு ஒழித்து தனிப்பட்ட ஒவ்வொருவனுக்கும் இவ்வுலகம் சொந்தம் என்ற எண்ணம் பிறக்கும். மெய் அறிவுக்கே அடிபணிவோம் எனச் சொந்தம் பாராட்டி இன்பம்பெறலாம்.

ஜாதி, மதம், உயர்வுதாழ்வு என்பதெல்லாம் மனிதன் ஏற்படுத்திக்கொண்டதே அதைவிலக்கி உலகில் மனிதராய்ப் பிறந்த ஆண், பெண் அடங்கலும் நம் இனம், நம்மக்கள், நம்உறவினர், நாம் வாழவே அவர்கள் பிறந்தாரகள், அவர்கள் வாழவே நாம் பிறந்தோம் என்றெண்ணி ஒருவருக்கொருவர் பணிசெய்து பகிர்ந்து உண்டு இன்புறுவதை இறைவனின் கட்டளை என்பதை நாம் உண்மையுடன் உணர்ந்தோமேயானுல் உலக நெருக்கடி மாறி மக்கள் சுகவாழ்வை அடைய ஏதுவாகும். எல்லா உயிர்களும் சேர்ந்து சுகவாழ்வு வாழ்வதற்கு உலகம் படைக்கப்பட்டதேயன்றி தனியான ஒருவனுக்கல்ல, உலகத்தை உல்லாச ஆனந்த நர்த்தன, மேடையாக்கிக்கொள்ள போதிய அறிவையும் விவேகத்தையும் ஆண்டவன் நமக்கு அளித்துள்ளான். அதை நாம் பயன்படுத்திக்

கொள்வது நமது கடமை கடமையைச் செய்யாதவரை நமக்குப் பலவித இன்னல்கள் வந்தேதான்தீரும். கடமையை மறந்து கதறி யழுவதால்மட்டும் காரியம் கைகூடிவிடுமா? கூடாது கூடாது. இட்டார்க்கு இட்டபடி என்பது ஆண்டவன் சட்டம், இதைத் தவிர்க்க யாராலும் ஏமாற்றமுடியாது. ஏமாற்றினால் அது வட்டியும் முதலுமாக நம்மையே பின்சாரும். தப்பித்துவிட முடியவே முடியாது.

சகோதரர்களே, மனத்தூய்மையுடன், பிறரிடம் அன்பு கூறுங்கள், பிறர் குற்றங்களை மன்னியுங்கள் யாரிடமும் விரோதம் பாராட்டாமல் தங்களால் இயன்ற உதவியைச் செய்யப் பின்வாங்கா தீர்கள்; பழிபாவங்களுக்கஞ்சி ஒதுங்கி விலகுங்கள். தீமையை வரவேற்காதீர்கள், அதற்குப் பயந்து ஓடவும்செய்யாதீர்கள். வீர முடன் எதிர்த்துப் போராடி நம்மிடையே தீமைகள் தலைகாட்டா மல் துறத்திக்கொல்லுங்கள். உயிர்க்கஞ்சி ஓடி ஒளியாதீர்கள். மனஉறுதியுடன் தீமையை எதிர்த்துநின்று வாழ்க்கையை நடத் துங்கள். வேற்றுமையை ஒழியுங்கள். ஒற்றுமையை உண்டுபண் ணுங்கள். கோபத்தையும் கொடுமையையும் கைக்கொள்ளாதீர்கள். தானத்தையும் தர்மத்தையும் தமதுடமையாக்குங்கள். கொலையை ஒழியுங்கள். கருணையை நிலைநிறுத்துங்கள். ஐக்கியத்தை உண்டு பண்ணுங்கள் அதர்மத்தை அகற்றுங்கள். மக்களோடு மக்கள் சேர்ந்து வாழச்செய்யுங்கள். எல்லோரும் இன்புற்று வாழவே பாடு படுதல் நமது கடமை என்றெண்ணி அதைதிடமாக நிறைவேற்றுங் கள். உலக இன்பம் தானே உதயமாகும். நம் வாழ்வு இன்புறவே யன்றி துன்புறவல்ல. துன்பவாழ்க்கைக்குக் காரணம் அறிவின்மை யும் மூடநம்பிக்கையும் பயமுமே முக்கியகாரணங்கள் துன்பத்தை அனுபவித்து உயிர்விடுவதைக்காட்டிலும் துன்பத்தை எதிர்த்துப் போராடி உயிர்விட்டால் கோடிலாபமுண்டு ஆண்மையுண்டு புகழ் உண்டு. நமது பின் சந்ததியாருக்கும் ஊக்கமும் ஆதரவும் பிறக்கும். முடிவில் வெற்றியும் கிட்டும். துன்பச்செயல்களுக்குப் பணிந்தால் தீராத்துயரமும அதன் நிழலாகிய அடிமைத்தனமும் கோழைத் தனமும் நாம் தேடும் கேவலத்தன்மையாகும். மக்களே! எக்கார

ணத்தைக்கொண்டும் அடிமைக்கு இடங்கொடாதீர்கள். எமனுக்கு இடம்கொடுத்தாலும் அடிமைக்கு இடம்கொடாதீர்கள். எதிர்த்துப் போராடுங்கள் பின்வாங்காதீர்கள்.

வெற்றி வெற்றியென்று ஜெயபேரிகைகொட்டுங்கள். வீர சங்கநாதம்செய்யுங்கள். தாழ்வு நமக்கல்ல நாம் யார்க்கும் குடியல்லோம் நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே. அன்பு ஒன்றுக்கே அடிபணிவோம். ஐக்கியத்திற்கே கட்டுப்படுவோம். ஆயுத பலத்தைக்கண்டு அஞ்சோம். அதை அறவே ஒழித்துக் கட்டுவோம். அன்பின் பலத்தை உலகெல்லாம் பரவச்செய்வோம். மிருகபலத்தை மிதித்து நசுக்குவோம் என்று வீரமுடன் எழுந்து ஒன்றுபடுங்கள். உங்களை எது எதிர்க்கும் அல்லது எதுமிரட்டும், அல்லது எதுஉருட்டும், அல்லது எதுவிரட்டும், பார்ப்போம். எதற்கும் அஞ்சேல் அவனிமீது, எதற்கும் அஞ்சேல் என்னும் ஐக்கியத்தின் வீரநாதம் பம்பம்என எதிரொலி எங்கும் செய்யுமே பயமேன் நமக்கு.

நம்பணி அன்பர் பணியேயன்றி வம்பர் பணியல்ல. வம்பர்களை வாட்டி வாளால் வெட்டி வீழ்த்துவோம். அன்பரை ஆதரிப்போம். எம்கடன் அதுவேயன்றி வேறொன்றுமல்ல என்பதை உலக மக்களுக்கு முன்பாக உறுதிப்படுத்துங்கள். அப்போது தான் வம்பு ஒழிந்து அன்பு பிறக்கும் என்பது உண்மை. நாமும் உலக மக்களும் வாழும் வாழ்வு இன்ப வாழ்வாகவே இருக்க வேண்டும். மானமான வாழ்வாக இருக்கவேண்டும். அஃதில்லையேல் வாழாமை இனிது என்பதே நமது உறுதியாக இருக்கவேண்டும். மானங்கெட்ட வாழ்வுக்கும் நமக்கும் எக்காரணத்தைக் கொண்டும் தொடர்பு தேவையில்லை. துக்கத்தையும் துயரத்தையும் துணிந்து விரட்டுவோம். உலகில் அடிமையை ஒழிப்போம். அன்பை வளர்ப்போம் ஐக்கியத்தை ஆதரிப்போம் என்னும் திட சங்கல்பமும் வைராக்கியமும் அதற்குவேண்டிய தியாகமும் நம் மனதில் திடமாக நின்று போராடவேண்டும். பயமும் பணிவும் நம்மிடம் மருந்துக்கும் இல்லை என்பதை உலகம் உணர உறுதிப்படுத்தவேண்டும். எல்லோரும் இன்புற்றிருப்பதற்கே செயல்புரி

வோம் நாமும் அடிமைப்படோம். பிறரையும் அடிமைப்பட விடோம் என்பதே எங்கள் விருப்பம். அதுவே எங்கள் கொள்கை என்பதை எடுத்துக்காட்டுவோம். மனிதன் விரும்பினுல் எதையும் கட்டுப்படுத்தமுடியும் என்னும் தத்துவத்தை அறிவோம். மனிதனின் பேய்குணத்தை விலக்குவது பெரிய காரியமில்லை. மனித சக்திக்கு உட்பட்ட காரியமே அது. மதியைக்கொண்டு விதியை வெல்லுவோம். அன்பினுலும் ஆகாததும் உண்டோ. அவனிமீது அறிவுகெட்டோரே அறிந்துபாருங்கள் என எடுத்துக் கூறுவோம். மனங்கலங்கிடோம், காலத்தையும் நேரத்தையும் பயன்படுத்துவோம். சோம்பலை உதறித்தள்ளுவோம், ஆண்மையால் ஆதரவைப் பெறுவோம். வைராக்கிய நெஞ்சத்துடன் நற்காரியங்களைச் செய்வோம். வஞ்சனையையும் சுயநல சுரண்டலையும் துலைத்துக் கட்டுவோம். எங்கள் நாடு எங்களுக்கு உரித்தானது. உங்கள் நாடு உங்களுக்கு உரித்தானது. முழு உலகமும் நம் எல்லோருக்கும் பொதுவானது என்பதை உலகிற்கு எடுத்துரைப்போம். ஐக்கிய பலம் ஆயுதபலத்திலும் பெரிது என்பதை அறிவோம். உலக நலனுக்கென்றே உழைத்து வாழ்வோம். உலகம் உலக மக்களுக்கேயன்றி கொள்ளையடிப்போருக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கும் யதேச்சையதிகாரிகளுக்கும் கொலைபுரிவோருக்கும் சூட்சிக் காரர்களுக்கும் ஆயுதபலம் உள்ளவர்களுக்கும் பெரும் பொருள்படைத்த முதலாளி வர்க்கத்துக்கும் சுயநலப் பேயர்களுக்கும் சொந்தமில்லை என்பதை அழுத்தமாகக் கூறுவோம். நாங்கள் எந்த உலகத்தில் பிறந்தோமோ அந்த உலகம் ஏன் எங்களுக்குச் சொந்தமில்லாமல் போகவேண்டும். உலகில் பிறந்த மக்கள் உயிர் வாழ இடம்கொடாது புறக்கணிக்கும் எந்த சக்தியையும் எதிர்ப்போம், அதை ஒழிக்கவும் செய்வோம். இருக்க இடமற்றுப் பிழைக்க வழியுமற்று நிற்க நிழலற்று தவிப்பதைக்காட்டிலும் அப்பொல்லாத சக்தியை எதிர்ப்பதுவே மேலானகாரியம். இவ்வுலகில் பிறக்கும்போது எதையும் கொண்டுவந்ததில்லை. இறக்கும்போதும் எதையும் கொண்டுபோவதில்லை. இடைநடுவே சுயநல வாதிகளும் சூட்சிக்காரர்களும் ஆள்வோர்கள் எனப்படுவோரும் செய்யும் வஞ்சகப்பேய்ப் போராட்டமே இத்தனை அலங்கோலங்

களுக்கும் காரணம். மதிகெட்டவனே உலகினையும் அதன் பொருட்களையும் வாரி வாரி எடுத்து ஏன் மறைக்கின்றாய். உனக்கு வேண்டியது எவ்வளவு? ஒருச்சாண் வயிற்றுக்காக உலகினையே ஏன் விழுங்கப்பார்க்கின்றாய். உன் வயிறு ஏரியா? குளமா? குட்டையா? ஆற்றுநிரம்ப தண்ணீர் போனாலும் நாய் நக்கித் தானே குடிக்கவேண்டும் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும். தேவைக்கு மிஞ்சி க்ஷேமித்தபொருளை நீ செத்தவுடன் எடுத்தா போகப்போகின்றாய். இல்லையே பின் ஏனிந்தத் தொல்லை. பிறந்தவண்ணமே இறந்த வண்ணமும்.

மனித வாழ்நாட்கள் மிகக் கொஞ்சம். அதில் பாதி தூக்கத்திலும் கால் பாகம் இளமையிலும் முதுமையிலும் போக மிஞ்சிய கால்பாக வாழ்வுதானே மனிதனைச் சுகப்படுத்துவது, அதிலும் எத்தனை நோய் நொடி விபத்து ஆபத்துக்கள் எந்தநேரமோ என்ற நிச்சயமற்ற வாழ்க்கையைப் பண்படுத்தி இன்புற்று வாழ அறியாமல் ஆசைப்பேய்க்கு அடிமைப்பட்டு மோசம்போகும் மாந்தர்காள் நீங்கள் கண்ட சுகம்தானென்ன? நல்ல தூக்கமுண்டா நல்ல சுகமுண்டா மன அமைதியுண்டா, கவலையற்ற தன்மை உண்டா? ஏக்கமற்ற நிலை உண்டா? பயமற்ற தன்மையுண்டா? நீசக்குணம் படைத்த பேயர்களாகிய கொடும் மக்கள் அடைந்த சுகமென்ன? வெளிப்பகட்டும் மினுக்கும் தழுக்கும் குலுக்கும் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் முடிவில் ஏமாற்றமுந்தான் கண்ட பலன். உண்மையை உணரவோ மனஅமைதியோ பாரமற்ற நினைவோ சஞ்சலமற்ற வாழ்வோ ஏற்படப்போவதில்லை. சுயநலப்பேயர்கள் வருந்தினாலும் வராது என்பது உண்மை. சத்தியத்தையும் அன்பையும் புறக்களிப்பவன் வாழ்வு வெளிக்குத் தெம்பாகப்பட்டாலும் உள்ளூரப் புழுத்து வீசின புண்பட்ட வாழ்வேயன்றி புனித வாழ்வு ஆகாதது. கால்வயிற்றுக் கஞ்சிக்கு கெதிஅற்றவனாயினும் புனித வாழ்வைப் பின்பற்றுவோன் எதைக்குறித்தும் கவலைப்படான் அவனுக்குக் கிடைத்ததேபோதும் என்ற மனஅமைதியும் நிறைவுமுண்டு. எவனுக்கு மனநிறைவு உண்டோ அவனுக்குக் குறைவு ஒன்றுமில்லை. இன்பமேயல்லாது துன்பமில்லை என்

பதுவ அவன்கண்ட உண்மை போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து அளவுக்கு மிஞ்சிப் பொருள்தேட அலைவது பேயர்களின் போக்கு, தேவைக்குமிஞ்சிப் பொருள்தேடுவது பாபமும் மோசமுமாகும்

இதற்கு பக்கபலமாக இருக்கும் எந்த ஆட்சிமுறையும் மோசக்காரனுக்கு நாசக்காரன் உடந்தை என்பதைப்போல்தான் ஆகும். ஒருநாட்டின் சமாதானத்திற்கு இன்றியமையாத நிலை என்னவென்றால், பொதுமக்கள் தேவைக்குமிஞ்சி எதையும் சேமித்து வையாமையாகும். ஒருவன், இருவர் உட்காருமிடத்தைப் பிடித்துக்கொண்டால் மற்றொருவன் நின்றுதானே ஆகவேண்டும். இதேபோல் பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி மக்கள் அடையவேண்டிய பாத்தியதையைக்கூட இன்று எத்தனையோ ஒருவன் பிடித்து நாசப்படுத்துகிறான். இழந்தவன் ஏமாந்தபட்டமும், மோசடியில் தேடிக்கொண்டவனுக்கு கெட்டிக்காரன்பட்டமும் கொடுக்க உலகம் தயாரில் இருக்கிறது. இதற்கு வக்காலத்துக்கும் ஆதரவுக்கும் உதவிபுபுய அரசு காத்துக்கொண்டிருக்கின்றது. இதைப்பற்றி கேட்பவர் யார்? கேட்டால் அடி மிதி உதை பிடி சிறையில்தள்ளு என்று சொல்வதைத்தான் நாம் கண்டோம், கேட்டோம் கேட்பாரில்லையேல் தம்பி சண்டப்ரசண்டன்தானே அரண்மனைக் கோழிமுட்டை அம்மியை உடைக்கும் என்றுசொல்லி பயப்படும் வாயில்லாப் பூச்சிகள் போன்ற பாமர மக்கள் படும் துயரமென்ன? இரத்தக் கண்ணீர் சிந்தி அலறித் தவித்தாலும் அன்னவர்களை ஆதரிப்போர் யார்? ஏதோ சிலர் சிறிது உணவும் உடையும் பணமுங்கொடுத்து உதவிவிட்டால் நாட்டின் வறுமை ஓடிவிடுமா? கடலில் பெருங்காயம் கரைத்தது மாதிரிதான். ஒரு நாட்டின் அமைதி, சுகவாழ்வு, முன்னேற்றம், கைத்தொழில், அறிவு வளர்ச்சிக்கான கல்விஞானம் நாட்டின் தேவைக்கு உணவு மற்றும் வாழ்க்கைக்குறிய வசதிகளை பூர்த்தி செய்துகொள்வதற்குத்தான் நாட்டில் அரசாங்கம் ஏற்படக் காரணமே தவிர பொதுமக்களை அதிகாரம் பண்ணுவதற்கல்ல, பொதுமக்களுக்கு ஊழியம் செய்யவும் அவர்களுக்கு வேண்டுவன

தேடிக்கொடுக்கவுமே அரசாங்கம் உள்ளதென்பதை மக்கள் உணர்ந்தால் ஆட்சிபீடத்தில் அதிகாரமாவீற்றிருக்கும் அன்பல்லவா அமர்ந்திருக்கும். அன்பின் ஆட்சியே அரிய ஆட்சியாகும். இதனை மக்கள் அறியாக் கொடுமையே மக்களைத் திண்டாடவைக்கிறது. இத்துடன் பணத் திமிர்பிடித்த வெறியர்களும், சுயநலப்பேயர்களும் அதிகார மமதைஉள்ளோரும் உலகத்தை எனக்கு உனக்கு என்று பங்குபோடவும் பிடிக்கவும் மோப்பம்பிடித்து அலைகிறார்கள். இதனால் எற்படும் சண்டைக்கும் வம்புக்கும் கொடுமைக்கும் கொலைக்கும் அளவேயில்லை. நாட்டையும் தேசத்தையும் துண்டாடிப் பிரித்து அல்லோலப்படுத்துவது உலக நாசத்தைத் தான் உண்டுபண்ணுமேதவிர ஐக்கியத்தையோ அன்பையோ உண்டாக்காது. நண்பனே! துராசைப்பேய்க்கு நீ அடிமைப்பட்டு உனக்கு ஓர் அடிமையைத் தேடாதே. மக்களுக்கு மக்கள் அடிமைப்படுவதை நீக்கி ஆதரவையும் நேசத்தையும் மக்களிடம் வளர்ப்பதே அன்பின் முன்னேற்றம். மனிதன் புனிதஜீவன். வாழப்பிறந்தவன். ஐக்கியத்தையும் அன்பையும் நிலைநாட்டக் கடைமைப்பட்டவன். மகாப்புருஷன் என்பதற்கையமில்லை. ஆனால் மாய்கையின் மயக்கத்தால் பொய், சூது, காமம், கொலை, குடி என்ற பஞ்சமா பாதகங்களில் ஈடுபட்டு அறிவிழந்து நாசமடைகிறான். மதியை இழப்பவன் பித்தன், பித்தன் பேயனாகிறான், என்பதை உணர்க. மனிதனே! மதிமோசம் போகாதே. மதியை விதியும் வெல்ல முடியாது இதை மறக்காதே.

அன்பின் தன்மையை யுணர்ந்த மக்கள் ஆண்டவனிடம் பேரன்பு உடையவர்களாகவும் உலகநிலை மாறுதல்களை உள்ளது உள்ளவாறு உணரும் தன்மைபடைத்தவர்களாயும் சகல உயிர்களிடத்திலும் உற்ற துணைவர்களாயும் உழைக்கவும் கொடுக்கவும் பிறந்தோமேயன்றி ஏமாற்றவும் பறிக்கவும் பிறக்கவில்லை. என்னும் கருத்தோடுங் கூடிய கைமாறு கருதா கருணைபடைத்தவர்களாயும், இன்சொல் உடையவர்களாகவும் அன்பையே பிறவிப் பயனாகக் கருதி பிறர் தீங்கையும் பொருட்படுத்தாது பொதுநலத்திலேயே கண்ணும் கருத்தும் உடையவர்களாயும் உலக உயிர்

யாவும் கடவுள் உயிர் என்னும் எண்ணம் படைத்தவர்களாயும் உலகம் உய்ய உடல் பொருள் ஆவியையும் தியாகம் செய்யப் பின் வாங்காத பேரன்பு படைத்தவர்களாயும் உள்ளவர்களே அன்பின் மெய்யடியார்கள் ஆவார்கள்.

அன்பு உடையவர்களே உண்மை மனிதத் தன்மைபடைத்த புனித ஆத்துமாக்கள் அவர்களே அருள்படைத்தவர்கள். அவர்களின் உள்நோக்கம் எப்பொழுதும் உலக உயிர்களை உய்விப்பதிலேயே நிற்கும், தனக்கென்று வாழாது உலகிற்கென்று வாழும் உள்ளம்படைத்தவர்கள் ஜாதி நிறம் மதபேதங்களைக் கருதமாட்டார்கள். எவ்வுயிரும் தம்முயிர் என்பதே அவர்கள் கொள்கை. பொல்லாக் கொடிய வேற்றுமைக்கு அவர்களிடம் இடமில்லை. ஐக்கியத் தன்மையே அவர்களின் இயற்கைக் குணம். மாய்கையை மடக்கித் தூய்மையைக் கடைபிடித்து வாழ்வதே அவர்களின் தொழில். அன்புக்கே அடிமைசெய்வோம். ஐக்கியத்துக்கே தொண்டுசெய்வோம் என்னும் ஆற்றல் படைத்தவர்கள். உண்மை அன்பே அவர்களின் உயிர்நிலை. பேருக்கும் புகழுக்கும் காசு பணத்திற்கும் காமசுகத்திற்கும் ஆசைப்படார். சதா தெய்வ சிந்தனை தவறினல் ஆத்தும சிந்தனை அதனையும்விட்டால் உயிர்கட்கு உதவுதல். இந்த முத்தொழிலே அவர்களின் சித்தாந்தமும் அனுஷ்டானமுமேயாகும் அதிகாரத்தினர் அவர்களை அசைக்கவே முடியாது. அதற்குப் பணியவுமாட்டார்கள். பிறர் உயிரைக்காக்க தன்னுயிரையும் கொடுக்க அஞ்சமாட்டார்கள். இத்தகைபடைத்த பெருந்தகையார்களையே மக்களுக்கு வழிகாட்ட முன்கொண்டுவந்தால் உலகத்துயர் சூரியனைக்கண்ட பனிபோல் விலகுமென்பதற் கையமில்லை. அன்பின் அடியார்களாகிய தியாகிகளே நமக்குத் தலைவர்களாகவும் உற்ற துணைவர்களாகவும் வர நாம் பாடுபடவேண்டும். வருந்தினல் வராதது ஒன்றுமில்லை. வருந்தியழைத்தால் அல்லது இதற்காக உழைத்தால் இத்தகைய தியாகிகளைக் கொண்டுவரலாம். கிடைக்காதுபோனல் உண்டுபண்ணுவோம் என்னும் உறுதிவேண்டும். கூடுமானல் நாமே உண்மைத் தியாகியாக முன்வர முயலவேண்டும். தியாகிகள் என்றால்

குதிரைக் கொம்பா? அவர்களும் நம்மைப்போல் உலகில் பிறந்து முன்னேறியவர்கள் தானே என்னும் உறுதிபெற்ற எண்ணமும் ஊக்கமும் இருந்தால் நாளையே நாமும் தியாகியாகிவிடலாம்.

அச்சமும் அவநம்பிக்கையும் உதவாது. துணிவும், தன்னம்பிக்கையும் வேண்டும். இது இருந்தால் உலகத்தைக்கூடமாற்றி அமைத்துவிடலாம். மனித சக்தி மகிமைக்குறியது. அதைரியத்தால் அழிவைத்தேடாதீர்கள். தைரியமாக முன்வாருங்கள். ஜெகத்தோரே சேர்ந்து வாழ்வோம் என்பதே நமது அறைகூவல்.

மதங்களையும் மனிதர்கள்தான் படைத்தார்கள். ஏன் படைத்தார்கள். மக்களிடம் நல்லெண்ணத்தையும் ஜீவகாருண்யத்தையும் உண்டுபண்ணவே மதங்கள் ஏற்பட்டது. மதங்களின்மூலம் ஐக்கியத்தையும் நிலைநிறுத்தப் பாடுபட்டார்கள். அதற்கான கோட்பாடுகளையும்வகுத்து மக்களுக்கு வழிகாட்டினார்கள். என்றாலும் அவர்கள் எண்ணம் முற்றிலும் பூர்த்தியாகவில்லை. ஆனால் அவர்கள் ஏற்படுத்திச்சென்ற மதங்கள்மட்டும் இன்னும் உயிர்பெற்றிருக்கின்றது. ஏன்? மதக்கர்த்தாக்களின் பரிசுத்த பக்தியும் அன்பும் நடத்தையுமே இன்னும் சாகாவரம்பெற்று உலகில் மதங்களின் பேரால் உலாவுகின்றது. இன்று அவர்கள்மீண்டும் உயிர்பெற்று வந்தால் அவர்கள் ஏற்படுத்திச்சென்ற மதங்களின் நோக்கத்திற்கு மாறாக ஒருவருக்கொருவர் மதவெறிகொண்டு மண்டைகளை உடைத்துக்கொண்டு மாண்டுமடிவதைக்கண்டு கண்ணீர்விடாமல் வேறு என்னசெய்வார்கள் என்றுதான் தெரியவில்லை.

ஆனால் தற்காலப்போக்கு மதங்களுக்குமேற்பட்ட அன்பின் சக்தியின் கட்டுப்பாட்டில் மக்கள் வாழவேண்டிய காலம் வந்துவிட்டது. இதில் மதவேற்றுமைகளுக்கும் ஜாதி நிறத்துவேஷங்களுக்கும் தனிப்பட்ட வாழ்வுக்கும் இடமில்லை. காலப்போக்கு மதத்தின்பேரால் செய்யும் சுயநல சூட்சிகளுக்கும் அதன் பித்தலாட்டங்களுக்கும் இடம்கொடுக்காது. இவைகளை அறவேஒழித்து மக்களிடை நேர்மையையும் ஒற்றுமையையும் அன்பையுமே வளர்க்கும் சிறந்த முறைகளையே நமக்குரிய உரிய மதபோதனை

ளாகக்கருதி காரியத்தில் இறங்கவேண்டும். அன்பு, ஐக்கியம், உண்மை, இவை மூன்றுமே சகல மதங்களுக்கும் அடிப்படையான குணங்கள். இதை மறைத்து சிலமதபோதகர்கள் நரகம், மோட்சம், என்னும் சொற்களால் மக்களை ஏமாற்றி, பொருள்பறிப்பதில் நோக்கம்கொண்டார்கள். மக்கள் காணிக்கை செலுத்துவதாலும் பலியிடுவதாலும் மக்கள் உயர்ந்தமனப்பான்மையை அடைந்துவிட முடியாது. ஒவ்வொருவரும் உண்மையறிவு, உண்மையுணர்ச்சி, உண்மைவாக்கு, உண்மைவினை, உண்மைவாழ்க்கை, உண்மை முயற்சி, உண்மை நினைவு உள்ளவர்களாகப்பழகவேண்டும். தேசத்துக்காகவும் மக்களுக்காகவும் உலகத்துக்காகவும் உழைக்கும்மனப் பான்மைபடைத்தவர்களாக மக்கள் வாழ்வது மிகவும் முக்கியம். சத்தியத்திற்கு மேலானது வேறு எதுவுமில்லை. அசத்தியத்திற்குக் கீழானது வேறு எதுவுமில்லை. தறகாலமதப்போக்கு பெரும்பாலும் பல சுயநல வாதிகளின் கூட்டுப் பிரச்சாரமாகவே இருக்கிறது. இது தற்காலப்போக்கிற்கு உகந்ததல்ல. மதவாதிகள் அவரவர் கற்ற வித்தைக்குத் தக்க விதமாக கூட்டியும் குறைத்தும் அவர்கள் மனப்போக்குக்கு உகந்தவாறு சமய சந்தர்ப்பம்போல் பேசி பாமர மக்களை ஏய்த்துப் பணம் பிடுங்குவதும் தங்கள் மதங்களில் சேர்த்துக்கொள்ளுவதும் கொள்கைகளாக இருக்கின்றது. இதனால் மக்களுக்கு நன்மையில்லை. இவைகளைக்கண்டு நாம் அஞ்சாது நாம் செய்வது நல்வினையா? அல்லது தீவினையா? என்பதை அறிந்து நல்வினையானால் கைக்கொள்ளவும் தீவினையானால் உதறித்தள்ளவும் பின்வாங்காது. நல்லது அல்லது கெட்டது என்னும் இரண்டு சொல்லிலேயே உலக விவகாரம் பூராவும் ஒடுங்குகிறது ஆகவே மனதை வீணில் அலைக்கழிக்கவேண்டாம் அன்பர்பணிக்கே பிறந்தோம். அதை நாம் நிறைவேற்றுவோம் அதுவே நமது கடமை. நன்மை தீமை என்ற இருகூறுக்கு நடுவே நமது உயிர் ஊசலாடுகிறது. நன்மை ஆண்டவனின் சந்நிதானம். தின்மை மாய்கையின் சந்நிதானம். இவை இரண்டிற்கும் மத்தியில் அகப்பட்டவன் மனிதன், அவனுக்குத் தனிப்பட்ட சுதந்திரம் உண்டு நன்மையைப் பின்பற்றினால் ஆண்டவன் சந்நிதானத்தை அடையமுடியும். தீமையைப் பின்பற்றினால் மாய்கையின் சந்நிதானத்தைத்தான்

அடையமுடியும். நன்மைகள் யாவும் பெருமையையும் தீமைகள் யாவும் சிறுமையையும்கொடுக்கும். ஆதலால் பெருமையும் சிறுமையும்தான் தர வருமே எனச் சொல்லப்பட்டிருக்கிறது. பகுத்தறிவுபெற்ற நாம் நமக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பரீட்சையில் தேற வேண்டுமானால் நன்மையான விஷயங்களைக் கடைப்பிடிப்போம். தீமையான நாசத்தை விலக்குவோம். இதுதான் நமது கடமை.

அன்பின் அருள்சக்தி, எண்ணிலடங்கா கோடானகோடி அண்டசராசரங்களையும் படைத்து அவை உயிர்வாழ பஞ்சபூத கருவிகரணங்களையும், தேவையான வசதிகளையும் ஏற்படுத்தி இயற்கையின் கட்டுத்திட்டங்களை உண்டுபண்ணி ஆட்சிபுரிந்துவருகிறது.

அதை மீறவோ அல்லது அவைகளிடமிருந்து விலகவோ முடியாது. உலகத்திற்கும் உயிர்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் அன்பே தலைவன். சகோதரர்களே! உலகம் அன்புமயம் என்பதை ஆழ்ந்து அறிந்து வாழ்க்கையை நாம் நடத்தவேண்டும். இதில் அடிமைக்கு நாம் ஆளாகாமல் உரிமையைக்கடைப்பிடித்து உலகத்தோடு ஐக்கியப்பட்டு அறிவை வளர்த்தால் அன்றி எந்த சக்தியும் நீடித்து நிலைபெறாது. அன்பின் சக்தி விசாலமே உலக அற்புதங்களுக்குக்காரணம். மனித சமூகம் இத்தகைய தெய்வீக சக்தியைக் கைப்பற்றினாலன்றி மக்களுக்குள் சுதந்திர வாழ்க்கையையும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் உண்டுபண்ணமுடியாது. சுதந்திரம் ஒற்றுமை என்று சொன்னால்மட்டும் வந்துவிடுமா? வராது. அதற்குத்தடையாய்யுள்ள சகல துர்க்குணங்களையும் நாம் போராடி ஒழிக்கவேண்டும். இதற்காக உலகில் பல பாகங்களிலும் ஒவ்வொரு வகுப்பிலும் சிற்சில தலைவர்கள்தோன்றி சுய ஜாதிக்கும் சிலர் நாட்டிற்கும் சில நன்மைகளைச் செய்ய வருந்தி உழைத்துவருகின்றார்கள். தற்கால ரீதியில் இவ்வித நன்மைகள் எல்லாம் சிறந்த பலன்களைத் தருவதாக இல்லை. மேலும், காலப்போக்கு உலகப் பிரச்னையாக மாறிக்கொண்டு வருவது கண்கூடு. உலக மக்களின் போக்கு நாளுக்குநாள் விரிவடைந்து உலகம் ஒரே குடையின்கீழ்வாழமுயலுகின்றது. உலகிலுள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர்

நெருங்கிய சம்பந்தமுடையவர்கள். தடுக்கமுடியாத இயற்கை உறவு பெற்றவர்கள் என்பதை உலகம்உணர ஆரம்பித்துவிட்டது. இதன் போக்கை உலகில்பிறந்த ஆண் பெண் ஒவ்வொருவரும் உணர வேண்டும் தற்காலப்போக்கில் உலகம் முழுமைக்கும் நன்மை செய்வது எதுவோ அதைத்தெரிந்து செய்ய முயல்வதே விவேகமாகும். இத்தகைய முயற்சி உண்டாகும்போது அதில ஒவ்வொரு மக்களும் இந்த நல்லெண்ணத்தை பங்கெடுத்துச் செயலில்கொண்டு வரவேண்டும். இத்தகைய அறிய செயல்களை மேலும் மேலும் முயற்சித்து வளர்க்கவேண்டும். இவைகள் உலக முழுமைக்கும் சேவைசெய்யும் வல்லமைபடைக்கவேண்டும். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னைப் பொறுத்தவரையில் நல்ல விஷயங்களைப் புறக்கணிக்காமல் அவைகளைப் பின்பற்றி நாம் நடக்க முதலில் பழகிக்கொள்ளவேண்டும். அதன்பின் நாம் நன்முயற்சிக்குப் பக்கப் பலமாக நம் சகோதரர்களையும் தூண்டவேண்டும். எத்தேசத்தவர் களாய் இருந்தாலும் மனித சமூகம் என்ற உறவின்பேரில் நம்மா லியன்ற ஆதரவை அளிக்கவேண்டும். இது மனித வர்க்கத்தவரின் முதற்கடமை. நல்ல பழக்கவழக்கங்களைப் பிறரிடமிருந்துதெரிந்து நடந்துகொள்ள வெட்கப்படக்கூடாது நமக்குத் தெரிந்த நன்மையான விஷயங்களை ஒழிக்கவுங்கூடாது நாம் வாழும்போதும்சரி தாழும்போதும்சரி நம் மக்களையும் நாம் வாழும் நம் நாட்டையும் மறக்கக்கூடாது. நம் சமூகத்தையும் அதன் தொண்டையும் பொருட்படுத்தாது. தன்னைமட்டும் தற்காத்துக்கொள்ள நோக்கம் கொள்வது மிகவும் அற்பத்தனம். நம் சமூக நலத்தின் ஆதரவில் நாம் வாழ்வு பெற விரும்பவேண்டும். தனிப்பட்ட வாழ்விலும் பொதுப்பட்ட வாழ்வே வல்லமைபடைத்தது அன்பு என்னும் சொல்லுக்கு பலனைக்கருதாத பரிவு என்பதுதான் பொருள் நம் மக்களிடை அன்பைப்பெருக்க குழந்தைப் பருவமுதற்கொண்டே பழக்கப்படுத்தமுயலவேண்டும். நம் குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் நேசமாக நெருங்கிப் பழகச்செய்வதுடன், ஒருவருக் கொருவர் அடிபிடியில் இறங்காமல் உள்ளன்போடு நேசிக்கமிகவும் இதமானவார்த்தைகளால் உற்சாகப்படுத்தவேண்டும். குழந்தைகள் தங்களுக்குக்கிடைக்கும் தின்பண்டங்களை மற்றகுழந்தைகளுக்கும்

மனங்கோணுது கொடுத்துத் தானும் புசிக்கப் பழக்கப்படுத்த வேண்டும். எப்போதும் உண்மைபேசக் குழந்தைகளை பழக்கம் வேண்டும். பிறர் குழந்தைகளைப் பழிக்கவோ அல்லது கடிந்து பேசவோ திட்டவோ அடிக்கவோ அல்லது வெறுத்து விரட்டவோ செய்யாது பார்த்துக்கொள்ளவேண்டும். மற்ற குழந்தைகளோடு அன்பாகப் பேசவும் அவர்களுக்கு ஆதரவு காட்டி விளையாட அழைக்கவும் பிறரிடத்தில் மற்ற குழந்தைகளைக் குறித்துக் கண்ணியமாகப் பேசப் பழக்கவேண்டும். விளையாட்டுக்காகிலும் திட்டு அடி விரட்டு துப்பு மிதி கொல்லு வெட்டு என்று கடுஞ்சொற்களைக் காதில் போடக்கூடாது சிறுவர்கள் பொய்பேச பெற்ருேர்களே சில சமயம் போதிக்கின்ருர்கள். இத்தகைய தீங்கு தங்களுக்குக் கெடுதியை விளைவிக்கும் என்பதைக் கவனிப்பதில்லை. குழந்தைகள் பெரும்பாலும் தங்கள் தாய் தந்தையர்களையே ஆரம்பத்தில் பின்பற்றுவதால், பெற்ருேரின் நடத்தையையே பிள்ளைகளும் பின்பற்றுகின்ருர்கள். குழந்தைகளுக்கு முதல் பாடம் தாயின் முகமேயாகும். தாய் தந்தையர்கள் நல்ல பழக்க வழக்கங்களைக் கையாடுபவர்களாக இருக்கவேண்டும் என்பது மிக்க அவசியம். இரண்டாவது குழந்தைகளின் சினேகிதர்கள் நல்லவர்களாக இருக்கவேண்டும். மூன்ருவது அவர்கள் இனிய சொற்களை அதிகம் கேட்டு வளரவேண்டும். நாலாவது அவர்கள் நற்செயல்களில் இறங்க நாமே தூண்டவேண்டும். ஐந்தாவது சாந்தமாகவும் ஒற்றுமையாகவும் பிறருடன் சேர்ந்து பழகப் பார்த்துக் கொள்ளவேண்டும் ஆருவது அவர்கள் எந்த ஜீவன்களையும் கொல்லாது இருக்கப் பழக்கப்படுத்தவேண்டும். அப்போதுதான் பெரியவர்களாலுைம் நல்ல பழக்க வழக்கம் ஏற்படும். மக்களிடம் அடிக்கடி அன்பைக் குறித்த சொற்கள் பழக்கத்தில் இருக்க வேண்டும். கோபத்தில் கூட பொறுமையான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சந்திக்கும்போதும் பிரியும்போதும் அன்பைச் சுட்டிக் காட்டும் சொற்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும்.

நாம் ஒருவரிடம் ஒரு பொருளை வாங்கும்போதும் கொடுக்கும் போதும் அன்பு என்று சொல்லவேண்டும். உதாரணமாக ஒருவ

ருக்கொருவர் பேசிக்கொள்ளும்போது. உம் சரி அப்படியா இப்படியா என்று பிதற்றுவதற்குப் பதிலாக அன்பு அன்பு என்று பெருமையாகச் சொன்னால் அன்பு இல்லா வன்பன் மனத்தில் கூட அன்பு உதயமாகிவிடும். ஒருவரையொருவர் சந்திக்கும்போது அன்பு ஓங்குக என்ற மங்களகரமான வார்த்தைகளால் வரவேற்கவேண்டும். அப்படியே பிரியும்போதும் அன்பு இருக்கட்டும் என்றும் சொல்லலாம். ஒருவருக்கொருவர் உதவி பெரும்போது தங்கள் அன்புக்கு என் நன்றி எனச் சொல்லலாம் வீட்டிலோ மற்ற இடத்திலோ பெரியோர்களைச் சந்திக்கும்போது அன்பு என்று சொல்லி நமஸ்கரிக்கலாம். ஆசீர்வதிக்கும்போதும் அன்பு ஓங்குக என்று ஆசீர்வதிக்கலாம். புருஷன் தன் மனையாளை என் அன்பே என்று அழைப்பதும் மனையாட்டி தன் கணவனை என் அன்பரே என்று அழைக்கவும் செய்யலாம். குழந்தைகளை அன்பா என்று அழைப்பதும் வழக்கத்தில் இருந்தால் வாழ்க்கையில் வெற்றிகரமான அன்பைப்பெருக்கும் அதிகாரத் தோரணையிலும் அன்பான வசனங்களையே பேசவேண்டும். அப்பொழுது தான் நம் மக்களிடை அன்பு முறை பெருகி பிறரிடம் அன்பு செய்யத் தூண்டும் என்பதை நாம் நேரில் பரீட்சிக்கலாம்

நம் தமிழ் நாட்டில் பெரும்பாலோர் தங்கள் பெண்டு பிள்ளைகளோடு மரியாதை வைத்துப் பேசுவதில்லை அதிலும் கீழ்தரமுள்ள குடும்பத்தினர் தங்களுக்குல் ஒருவருக்கொருவர் மதித்தோ அல்லது அன்பாகவோ அல்லது மரியாதையாகவோ பேசும் பழக்கம் மிகக் குறைவு. இதனால் அன்பு குறைவு ஏற்படுகிறது. அன்பு குறைந்தால் சுய நலமே தலை காட்டும். அன்பான வாய்மொழிக்கு மிஞ்சிய இன்பம் சங்கீதத்திற்குக் கூட இல்லை. அதிலும் நெருங்கிய உறவினர்கள் அன்பின் மொழியால் ஒருவரையொருவர் தழுவிப் பேசும் போது உண்மையில் அவர்களிடை தன்னை மறந்தபேரின்ப உணர்ச்சியை இலகுவில் பெறச் செய்கிறார்கள். இன்ப உணர்ச்சி, கனிவு, ஆசை, ஆனந்தம், திருப்தி, ஆவேசம், ஐக்கியம், போன்ற அரிய நிகழ்ச்சிகளை அன்பான இன்ப மொழிகளால் வெகு இலகுவில் பிறரிடம் தூண்டப் பேசலாம். வாய்ச்சொற்களால்தான் உலகம் ஆட்டுவிக்கப்படுகிறது. மனம், வாக்கு, காயம், செயல்களில்,

வாக்குக்குத்தான் அதிக வன்மையுண்டு. வாக்கால் யாரையும் வசீகரிக்கலாம். எப்படிப்பட்ட நல்ல செயலுடையவனாக இருந்தும் சுடுமூஞ்சியாயிருப்பானேயானால் அவனை யாரும் பிரியமாக நேசிப்பதில்லை அவனைக் கண்டால் உள்ளூறக் கசப்பே ஏற்படச் செய்கிறது. சிலர் கொடியவர்களாக இருந்தபோதிலும் வெளிக்கு அன்பாகவும் ஆசையாகவும் ஆதரவாகவும் இனிமையாகவும் வசீகரமாகவும் பேசக் கற்றுக்கொண்டவர்களாகயிருந்தால் அவர்களின் கொடுஞ்செயல்கள் கூட வெளிக்குத் தென்படுவதில்லை பிறரைக் கேட்டால், அவரா அவர் மிகவும் நல்லவராயிற்றே மிகவும் அன்பான மனிதராயிற்றே என்பார்கள். அன்புக்கு ஆளை மயக்கும் வசீகர சக்தியுண்டு. மிகுந்த அறிவாளிகள் கூட அன்பின் வசீகரப் பேச்சால் ஏமாந்துவிடுவார்கள். அன்பு யாரையும் மோசம் பண்ணாது. இரட்சித்துக் காக்கும் வன்மை பெற்றது. சில சுயநல வாதிகள் அன்பைத் தங்கள் காரிய அனுகூலங்களுக்காக வஞ்சகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவதும் உண்டு.

இதை நாம் போலி அன்பு என்போம். நாக்கில் இன்சொல்லும் தொண்டையில் கொடிய விஷத் தன்மையும் உள்ள மனித ஜீவன்கள் பல இருக்கத்தான் செய்கிறது. இதில் சிக்கி மோசம் போகாமல் சர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் கைக்குருவியை வைத்து காட்டுக் குருவியைப் பிடிப்பதுபோல் சில சுயநய வஞ்சகர்கள் உள்ளம் உருகப் பேசி சமயம் பார்த்து கழுத்தை அறுக்கவும் தயங்காத கல் நெஞ்சகர் பலர் நிறைந்த உலகமிது. ஒருவரை நாம் பார்த்ததும் நேசிப்பது சரியானாலும் அவர்களை அவர்கள் அறியாமல் நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்பே நெருங்கிப் பழகவேண்டும். முன்பின் அறியாமல் யாரையும் நம்பி விடுவது சில சமயங்களில் பேராபத்தாக வந்து முடிவதுமுண்டு. நயவஞ்சகர்களில் பெரும்பாலும் படிப்பாளிகளாகவும் மிகுந்த அறிவாளிகளாகவும் நாகரீக வாதிகளாகவும் பேச்சு வன்மையுடன் அன்பு ததும்பத் ததும்பப் பேசி தங்கள் மாய வலைகளில் எதிராளிகளை விழச்செய்யும் மாயா ஜாலக்காரர்களாகத்தான் இருப்பார்கள் இத்தகையோர்களை நாம் எளிதில்கண்டு கொள்ள முடிவ

தில்லை. இவர்கள் பச்சை ஓந்திபோல் சமயத்திற்குத் தகுந்தாற் போல் நடிப்பதில் கைதேர்ந்தவர்கள் ஞானிகளைப்போலவும் முற்றும் துறந்த முனிவர்களைப்போலவும் உலகத்தையே துரும்பாக மதிக்கும் தியாகிகளைப்போலும் பிறர் பொருட்டு தன்னையே அர்ப்பணம் செய்யத் தயங்காதவர்களைப்போலவும் எதையும் எளிதில் சாதிக்க வன்மை பெற்றவர்களைப்போலவும் பொது சேவையே தனது விரதமென்றும் உலக மக்களுக்காகத் தனது உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்துவிட்டதாகவும் இரவும் பகலும் முணமுணுவென்று எல்லாம் வெறுத்தவர்களைப் போல் ஜெபித்துக்கொண்டு பெரும் பக்தர்களைப்போல நடித்து தங்கள் கொள்ளிக் கண்களை எப்போது சமயம் வாய்க்கும் என்பதிலேயே கூர்மையாகக் கவனம் செலுத்தும் பாவிகள் அனந்தம். இவர்களிடம் சிக்குண்ட பாமர மக்கள் தங்கள் சொத்து சுகம் உடல் பொருள் ஆவியைக்கூட சில சமயங்களில் இழக்கவேண்டிய நிற்பந்தம் ஏற்படச் செய்கிறது. இவர்களில் பலர் தலைவர்களென்று முன் வந்துவிடுகின்றார்கள். படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் என்பதைப்போல் பக்கபலமாகப் பாமர மக்களை அணைத்துக்கொண்டு இவர்கள் பண்ணும் அட்டகாசங்களும் கொடுமைகளும் கொஞ்சமல்ல. இத்தகைய பாவிகளால் சில சமயம் உலகில் மகா யுத்தங்களுமுண்டு லட்சக்கணக்கான மக்கள் தங்கள் மனைவி மக்கள் சுற்றத்தாரோடு மடியவேண்டிய நிற்பந்தமும் ஏற்படச் செய்கிறது. நாடு நகரம் பட்டணம்போன்ற பெரிய பெரிய நகரங்கள் இருந்த இடம் தெரியாமல் தூர்த்தடிக்கப் படுகிறது. இதற்கெல்லாம் காரணமென்ன? என்று அலசிப் பார்ப்போமானால் அறிவு படைத்த நயவஞ்சகப் பேயர்கள் தான் காரணம் என்பதைக் காணலாம். ஒரு முரட்டுத் தடியனால் ஏற்படும் கெடுதியைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு, அறிவு படைத்த ஒரு நயவஞ்சக எலும்பனால் கெடுதல் செய்ய முடியும் அறிவு நல்லதையும் சாதிக்கும் கெடுதலையும் சாதிக்கும் வன்மை பெற்றது.

அறிவை வளர்ப்பது பெரிதல்ல. அதைப் பயன்படுத்துவதில்தான் நன்மையும், தீமையும் இருக்கச்செய்கிறது. விஞ்ஞான

முறைகளால் அறிவு விசாலப்படவும் வாழ்க்கை வசதிகளை அகதிப் படுத்திக்கொள்ளவும், ஏதுவுண்டு என்பது மெய்யானாலும், அதை உலக ரட்சணைக்குப் பதிலாக அழிவுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் போது, அதன் உபத்திரவம் அதன் உதவியும் வேண்டாம், அதன் உபத்திரவமும்வேண்டாம் சும்மாவிட்டாலே போதுமென்ற நிலைமையை மக்கள் மனத்தில் இயல்பாகவே புகுத்திவிடுகிறது. உலக நாசத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் காரணம் அறிவுபடைத்த மக்களே காரணம்ஆவார்கள். படிப்பில்லாத முட்டாள்தனத்தைக் காட்டிலும் மிகுந்த அபாயமானது படித்த முட்டால்தனமாகும். ஆகையால், மக்களிடை இயல்பாகவே சிசுமுதற்கொண்டு பெரியோர்வரை ஒருவரிடம்ஒருவர் அன்புசெய்யவும், அன்பாகப்பேசவும், அனுதாபமாகநடந்துகொள்ளவும், தாங்கள்தங்கள் சக்திக்கு இயன்ற உதவியைப் பிறர்க்குச்செய்யவும் பழக்கவழக்கங்களில் சாதாரணமான நடைமுறையில் கொண்டுவந்துவிட்டமேயானால் அது பெரும்பாலும் மக்களை நல்ல பழக்கவழக்கங்களிலிருந்து மாறச்செய்யாது. உலகமே பழக்கவழக்கத்தை யொட்டியநடைதான். ஒருவன் திடீரென்று கெட்டவனாகவோ நல்லவனாகவோ மாறிவிடமுடியாது. அவனவன் பழக்கவழக்கத்தை ஓட்டியசெயல்தான் சட்டென்று வெளியேவரமுயலும். சிலர் நினைக்கலாம், எத்தனையோ நல்லவர்கள் திடீரென்று கொடியோர்களாக மாறிவிடவில்லையா என்று, இதற்கு அவர்களைப்பற்றி நாம்முற்றிலும் உணர்ந்துகொள்ளாததே காரணம். அவர்களை அலசி ஊடுருவிப்பார்த்தால் உள்ளே கொடும் துரோகச் செயல்கள்தான் எறிந்துகொண்டிருக்கும். பகட்டான ஆசை வார்த்தைகளும் மோகனப் புன்சிரிப்புமே அவர்களிடம் காணப்படலாம். அவர்கள் வஞ்சகம் வெளிக்கிளம்பும்போதுதான் அவர்களின் ராட்க்ஷசசுபாவத்தை நாம் காணமுடிகின்றது. சகோதரர்களே மனிதர் பிறக்கையில் நல்லவராகவோ அல்லது கெட்டவராகவோ பிறக்கவில்லை. சிசுவின் கபடமற்ற பால்போன்ற அதன் பரிசுத்த இருதயத்தில் விதைக்கப்படும். நல்லது கெட்டதுஎன்ற விதைகள் விழுந்து உள்ளூறமுளைத்து சிம்புவெடித்து மரமாகிப் பூத்துக்காய்க்கிறது. அதன் தன்மையைப் பொறுத்து அதன் பழம் இனிப்பாக

வோ அல்லது கசப்பாகவோ அல்லது விஷமாகவே அல்லது அமிர்த மாகவோ அல்லது நோய் நொடிகளை உண்டுபண்ணுவதாகவோ அல்லது நோய்நொடிகளைக்களைந்து எறிவதாகவோ அல்லது ரட்சிப் பதாகவோ அல்லது பட்சிப்பதாகவோ அமைகிறது. இவற்றிற் கெல்லாம் ஆதிகாரணம் என்னவென்று பார்க்கப்போனால் பழக்க வழக்கம்தான், பழக்கவழக்கத்தைக்கட்டுப்படுத்தி செம்மைப்படுத்த இன்றியமையாத அரும்பொருள் என்ன என்பதை ஆருயந்தால் அன்புதான் காட்சிஅளிக்கும்.

நீதியைக்காட்டிலும் அன்பு உயர்ந்தது. நீதிக்கு இரக்கம் கிடையாது நீதி தன் கடமையை நிறைவேற்றியேதீரும். அன்பு இரக்கமே உருவானது. தனது கொடிய எதிரியையும் மன்னிக் கவும் கூடிய சுபாவம்படைத்தது, அன்பு கைமாறைக் கருதாது. கடவுள் அன்பின் வடிவம் என்று சொல்வதேன்? இவ்வுலகையும் சூரியசந்திர நட்சத்திரங்களையும் படைத்து உலக உயிர்கள் வாழ் வதற்கு கோடானகோடி சாதனங்களையும் இயற்கையின் அனுகூலங் படைத்து வாழவைத்த அந்த ஈசனுக்கு இதனால் என்ன லாபம்? அதுதான் ஒன்றுமில்லை, எனக்காண்கின்றோம். பின் ஏன் இவை களையெல்லாம் உண்டுபண்ணவேண்டுமென்றால் அதற்குக் காரணம் அன்புதான். கடவுள்யென்று ஓர் மாபெரும் சக்திஇருந்து அதற்கு அன்புயென்று ஒன்று இல்லைஎன்றால் நாம் யாருமில்லை. இனி இருக்கப்போவதுமில்லை. ஆகையால், சகல அண்டசராசரங்களுக் கும் ஆதிகாரணமாக ரட்ஷிக்கப் பிறந்தது அன்பு என்பதுதான், அதை நாம் மறந்துவிட்டு கண்டதே லாபம் கொண்டதே கோல மென்று அலைந்து திரிந்து வாழ்ந்து மடிந்தால் அதன் பயன் நாசம் தான். அன்பே தெய்வமென்று மனம்உருக உள்ளுருக நினைந்து, ஆண்டவன் அன்பின் தூண்டுதலால் உலகைப்படைத்தான். அதை அதன் உதவியாலேயே ஆளுகிறான். ஜீவாத்மாக்களையும் பரமாத்மா வையும் தொடர்புள்ளவையாக ஆக்கி அருள்புரியும் அரும் பொருள் அன்பல்லவா! அத்தகைய மாபெரும் அன்பின் ஒலியை நாம் மறந்தால் இதைவிடஈன்றிகெட்ட புத்திவேறுண்டா? அல்லது இருக்கத்தான் முடியுமா? முடியது முடியாது. அன்பர்களே எல்லா

உயிர்களிடத்தும் அன்புசெலுத்துங்கள். பழிபாவங்களை விலக்கி அன்பையேகடைப்பிடியுங்கள். அன்பைப்போல் எளிய சாதனம் வேறுஎதுவுமில்லை. யோகம், ஞானம், வைராக்கியம், சக்தி, உண்மை தானதருமம், ஈகை இரக்கம் உபகாரம்போன்ற நல்ல செயல்களை நாம் இலகுவில் அடையவேண்டுமானால் அதற்கு மிக குறுகிய வழி அன்புமார்க்கம் ஒன்றுதான். அன்பை யாரும் இலகுவில் கைப்பற்ற லமம் இதில் சிறிதும் கடினமே இல்லை. சிசு முதல் இறக்கும் தொண்டுக் கிழவன்வரை கைபாழக்கூடியது நன்கு தடைபற்றது. கடினமில்லாத அன்பு மார்க்கம் ஒன்றுதான் அன்பர்களே! எனது பெரிய தந்தை ஆறுமுகம் பிள்ளை என்று ஒருவரிருந்தார். அவர் தயாள சிந்தைபடைத்தவர் ஏழை எளியவர்களிடம் அன்பாகவும் உபகாரமாகவும் இருந்துவந்தார். இவர் ஓர் சமயம் கன்னிவாடி என்னும் ஊரில் குத்தகைஎடுத்திருந்தார். அதற்கு பணம்கட்டு வதற்கு நோட்டாகவும் ரூபாயாகவும் ஆயிரம்உள்ள ஓர் பண முடிப்பை எடுத்துக்கொண்டு திண்டுக்கல்லுக்குப் போய்விட்டு கன்னிவாடிக்குப் போகலாம் என்று திண்டுக்கல்லுக்குவந்திருந்தார். இரவாகிவிட்டது, பணமுடிப்புடன் இரவில் கன்னிவாடிக்குப் போகத்தயங்கி அன்று இரவை திண்டுக்கல்லில் கழித்துவிட்டு மறு நாள் போகலாமென்று அவருக்கு நெருங்கிய பழக்கமான ஒருவர் வீட்டிற்குச்சென்று அவர்களிடத்தில் தான் கொண்டுவந்திருந்த ரூபாய் ஆயிரத்தையும் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கச் சொல்லி நாளை காலைதான் கன்னிவாடி போகவேண்டுமென்றும் அப்போது பணத்தை வாங்கிக்கொண்டுபோவதாயும் சொல்லிவிட்டு வீட்டு வெளித்திண்ணையில் படுத்துக்கொண்டார். அவ் வீட்டுக் காரன் ஒரு துரோகியும் கொலைப்பாதகனும்கூட. அவன் பண முடிப்பை வாங்கவும் ஆசைமேலிட்டவனாய் இரகசியமாய் தன் மனைவியை நடு இரவில் கூப்பிட்டு, காலை 4 மணிக்கே என் பெரிய தந்தையை எழுப்பிப் பணமுடிப்பைக்கொடுத்து ஊருக்கு நேரமாயிற்று போங்கள் என்று அனுப்பும்படியாகவும் அதற்கு முன் தான்போய் இடைவழியில் காத்திருந்து ஆளைச் சந்தித்ததும் ஒரே வெட்டாய்வெட்டி வீழ்த்திவிட்டு ரூபாய் முடிப்பைத் தட்டிக்

கொண்டுவந்துவிடுவதாகவும் இது வெளிக்குத் தெரியக்கூடாதென்றும் சொல்லிவிட்டு ஓர் பெரிய அரிவாள் சகிதம் போய்விட்டான். அவன் மனைவி அவன்சென்றபின் இவரை எழுப்பி பணமுடிப்பைக்கொடுத்து, இவர்இதற்குமுன் அவர்கள் குடும்பத்திற்குச் செய்த அன்பையும் ஆதரவையும்புகழ்ந்து கண்ணீர்விட்டு தன் கணவனது சதியோசனை முற்றிலும்கூறி காலையில் பக்கத்துத் துணைவரோடு ஊர்போய்ச் சேரும்படி சொன்னாள். இதற்குக் காரணம் அன்பல்லவா. அன்பு உயிரைக்காக்கும். இதை நாம் நித்திய கடனாகவும், நாம் அடையும் பாக்கியமாகவும் நாம் தேடும் பொருளாகவும் கருதி அன்புசெய்யவே பிறந்தோம். அன்பினால் வாழவே பிறந்தேன். அன்பின் ஐக்கியமே ஆனந்தம் என உணர்ந்து எல்லா உயிர்களும் அன்பின் தொடர்பு, நாம் அன்பின் வாரிசு அதையேபின் பற்றுவதல்லாது மற்றொன்றைக்கருதோம் எனக்கருதி அன்பு பணி பூண்டு மக்களுக்கு மக்கள் அன்புசெய்தோமேயானால் இப்பூவுலகம் பொல்லாத உலகம் என்று பெயர்வாங்குமா? நாம்தான் துயர் படுவோமா? அல்லது பிறர்தான் வாடிவதங்குவார்களா? யோசித்துப் பாருங்கள். அன்பிலிருந்து பிறந்தநாம் நாசத்தைப்போய்தாயென்று தஞ்சம் புகவேண்டும்? வேண்டாம். எங்கும், எப்பொழுதும் நிறைந்த அன்பின் வடிவான பராசக்திநின்று வேலைசெய்துகொண்டிருக்கும்போது பயமேன் நமக்கு? அஞ்சாது அன்பை தெய்வமாகக்கருதி எல்லா உயிர்களிடத்தும் அன்புசெய்யுங்கள். நம்மை பிடிக்கவரும் எல்லாத்துயரங்களும் நம்மைவிட்டு விலகும். இது சத்தியம். மெய்யன்பர்களே மறவாதீர்கள். பாடுபட்டால் பலன். கேட்பதிலும் படிப்பதிலும் பயனில்லை. தெரிந்த நற்காரியங்களைச் செய்வதில்தான் சித்தி. அன்பே ஆண்டவன் என்பதை மனப்பூர்வமாக நம்பி எல்லா உயிர்களிடத்திலும் அன்புபேசி அன்புநினைந்து அன்புபுரியுங்கள். அதன் பலன் அப்போதே கிட்டும்முறையில் முதலில் நீங்களே அன்பு இன்பத்தின் சுவைகாண்பீர்கள். இரண்டாவதுதான் நீங்கள் செழுத்தும் இடத்தில் பாயும் இத்தகை இனிய எழிய அன்பை பகுத்தறிவுபெற்ற மனித வர்க்கம் கைவிட்டாள் கேவலம் மிருக சுபாவம்வர யாரைப்போய்க்கேட்கவேண்டும். கைப் புண்ணுக்கு கண்ணாடியாவேண்டும். அன்பை தெய்வமாகவும்

மதமாகவும் மாதா பிதாவாகவும் நாம் தேடவிரும்பும் ஐசுவரியமாகவும், நமது லட்சியமாகவும் கருதி செயலில் பின்பற்றுங்கள் மெய் அன்பர்களே! ஆண்டவனின் வசீகர அன்பு நமக்குவேண்டுமானல் நமக்கு உயிர்களிடத்தில் மெய் அன்பு பிறக்கவேண்டும். சகல உயிர்களில் நின்று அதன் இயற்கைக் குணக்களைப்போதித்து அவைகள் முற்றிலும் அழிந்துபோகாது பாதுகாத்து ரச்சிபவனும் ஜீவனன சிவமேயாகும் ஜீவன்கள் அணைத்தும் சிவவடிவே அன்றி வேறில்லை எங்கும் நிறைந்த சாதா சிவத்தை நாம் நேரில்காண முடியாது. அதை உயிர்பெற்று உலாவும், ஜீவராசிகளுக்கு நாம் தொண்டுசெய்து அவைகளிடம் நம் அன்பை வளர்த்தால் அது முதிர்ந்து பேரன்பாகமாரி உலகெல்லாம் ஓர் உயிரின் துடர்பே அன்றி அனந்தமல்லவென்ற உண்மையை அன்பின்மூலம் நமக்குப் போதித்து உண்மை நிலையை நமக்கு நம் உள்நின்று உபதேசிப்பதுடன் நம்மையும் தூய்மைப்படுத்தி மாயாபந்தங்களில் சிக்குண்டு வாதனைப்படாது பற்றற்ற சுதந்திர மஹாபரிசுத்த நிலையையும் கொடுப்பான்.

இதுதான் பேரன்பின் பலன் இதைமறந்து அன்புசெய் என்றால் என்னசெய்வதென்பதே அநேகருக்கு விளங்குவதில்லை. "அன்பாய் இருவென்றால்" வந்தவர்களை வாங்க வாங்கயென்று சொல்லிவிட்டால் மட்டிலும் போதுமா அல்லது பிச்சைக்காரர் சிலருக்கு அமுது அளித்துவிட்டால் மட்டிலும் போதுமா அல்லது கோவில் குளம் மடம் சாவடி சத்திரம் சாலை தோட்டம், நந்தவனம் போன்றவைகளை ஏற்படுத்திவிட்டால் மட்டுலும் போதுமா இல்லை இவைகளெல்லாம் அன்பின் முதல்படிகளேயாகும் உண்மையான அன்பு நம்மை ஆட்கொள்ளவேண்டுமானால் அதற்கு முதலில் மண்ணுயிர்களெல்லாம் இன்புற்று வாழவேண்டுமென்ற பிரார்த்தனை நம் உள்ளத்தில் பிறக்கவேண்டும் அதை வாய்விட்டு பிறரிடம் அன்பு ததும்பத்ததும்ப பேசவேண்டும். அதற்காக நாம் தொண்டு செய்து அவைகளுக்கு இன்பம் பிறக்கசெய்து இதன்மூலம் அவைகள் இன்புறுவதைக்கண்டு நாம் ஆனந்திக்கவேண்டும். இத்தகைய இன்பதில்பிறக்கும் இன்பமே உத்தமமான பேரின்பமாகும். இன்பம் பல வகைகளில் உண்டாகச்செய்கிறதென்றாலும், அன்பில் பிறந்த இன்பத்தைக்கண்டு ஆனந்திப்பதைப்போன்ற

மஹா இன்பம் மற்றொன்றில்தோன்றாது. இதற்கு ஆராய்ச்சியும் முயற்சியும் உழைப்பும் தேவையில்லை. உலகம் வாழவேண்டும் அதைக்கண்டு நாம் களிக்கவேண்டுமென்ற உயர்ந்த என்றும்மாறாத அன்புமட்டும் நம் உள்ளத்தில் உறுதியுடன் நிலைத்து நின்று விட்டால் அதுவே அண்டசராசரங்களையும் நமக்கு அறிமுகப் படுத்திவிடும் அருளொழியும்கிட்டும். இதற்கு யோகம், தபம், உபவாசம், தானம் தருமம் தியாகமென்பதுகூட தேவையில்லை. உண்மை அன்பே சகலமும் அன்பின்றி உயிரில்லை உடல் இல்லை இந்த உலகமில்லை எல்லாம் அன்பின் மூலம் வந்தவைகளே, அன்பு ஒன்றுக்கே ஞானம் அடிமை உண்மைக்கு அன்பு உயிர் அன்பை பக்தியின்மூலம் வளர்ப்பதே வெற்றிக்கு அரிகூரி பக்தியும் அன்பும்கூடினால் முத்திகிட்டும். அன்பின் ஆசையும் அன்பின் செயலும்சேர்ந்து வேலை செய்ய தூண்டவேண்டும். அன்பை நாம் நம்முள் நிலைநாட்டிக்கொள்ள பக்க உதவியாக பிறர் களையும் அன்புசெய்யத் தூண்டவேண்டும், இதனால் நம் அன்பின் சக்தி மேலோங்கி வளரச்செய்யும். அன்பின் உறவு அதிகப் பட்டால், நம்மிடம் உள்ள கேவலத் தன்மைகளெல்லாம் தானே கரைந்து மறைந்துவிடும். அறிவு முதிரும் முடிவில் மெஞ்ஞான மும் உதயமாகும். மெய்யன்பின் நாதத்யையும் பூரணமாககேட்டு மகிழமுடியும். நாம் எல்லோரிடமும் கடுஞ்சொல்லில பேசாமல் பிறர் இன்புற அன்பாகப் பேசி மகிழச் செய்யவேண்டுமென்ற நினைப்பும் ஆசையும் இருந்தால் அது நம்மை அன்பாகப் பிறரிடம் பேசத்தூண்டும்.

பிறருடன் நாம் சேர்ந்து இன்புற்று வாழவேண்டுமென்ற ஆசை நமக்குள் பூர்ணமாக இருந்தால் பிறருற்கு தொண்டுசெய்ய வும், நம்மாள் முடிந்த பொருள் உதவியை பிறர்க்குகொடுக்கவும் செயல் பிறக்கும். நாம் செய்யும் அன்பு கைமாறு கருதாத அன்பாக இருக்கவேண்டும். பிறர் நம் உதவியை வழூவில் நாடி வரும்போது அதை புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்டு அதற்கு தக்கமுறையில் தகுந்த உதவியை நம் சக்திக்கு உள்பட்ட அளவில் செய்ய பின்வாங்கக்கூடாது. நாம் அளிக்கும் உதவி நல்லகாரியங் களுக்கு பயன்படக் கூடியதாக இருக்கவேண்டும். தீயோர்களின்

கொடுமைக்கு உதவக்கூடாது. அதற்கு பதில் அதை எதிர்த்து ஒழிக்கவேண்டும். நாம் பிறர்க்கு உதவும்போது ஜாதி, மத, அந்தஸ்துபோன்ற உயர்வுதாழ்வுகளை கவனியாது சமத்துவமுறையில் நன்மை தீமையைமட்டிலும் ஆராய்ந்து உதவவேண்டும்.

அன்பின் வளர்ச்சிக்கு சாந்த குணமும் பொருமையும் மிக அவசியம் அன்பு செய்ய முற்படும்போது அதனால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் பொருட்படுத்தக்கூடாது. அன்பு செய்வதென்பது மனிதற்கு மட்டும்மல்ல உயிர் உள்ள எல்லா ஜீவன்களிடமும் நமக்கு கருணைபிறக்கவேண்டும். அவைகளின் கஷ்டத்திற்கு உதவவேண்டும். அல்லது பரிகாரம் செய்யவேண்டும். மேலும், அன்பு உள்ளவன் தன்னிடம் உள்ள எதையும் பிறர்க்கு உதவத் தயங்கமாட்டான். அவசியமானல் தன் அறிய உயிரையும் அதற்கு அற்பணம் செய்ய தயங்கமாட்டான். அன்பு தியாகத்திற்கு பின் வாங்கச்செய்யாது ஒரு சமயம் ரோமாபுரியில்உள்ள பெரிய எரிமலை ஒன்று பயங்கரமாக வெடித்து அநேக மைல் உயரத்திற்கு நெருப்பை கக்கி எரிவாயில் அக்கினி குலம்பு பெருவாரியாகவடிந்து ஓட ஆரம்பித்துவிட்டது. அதன்வேகம் ஊராரையே அழித்து விடும்போல்தோன்றியது. உடனே ஊர் மக்கள் எல்லோரும் பயந்து ஒன்றுகூடி அவர்கள் தேவதையை வணங்கி தங்களை ரட்சிக்கவேண்டுமென பிரார்த்தனை செய்து ஆண்களும், பெண்களும் அழுது கலங்கினார்கள். அப்பொழுது அங்கு இருந்த கோவில் பூசாரி ஒருவன்மீது ஆவேஷம்வந்து ஆர்ப்பாட்டம்செய்து எரியும்மலை சாந்தமடையவேண்டுமானால் அதற்கு மக்களாகிய உங்களிடம் உள்ள மிக உயர்ந்த வஸ்து ஒன்றை அதற்கு தானமாக அந்த எரிவாயில்போட்டால் அதன்வேகம் உடனே அங்கு தனிந்து விடுமென்று சொன்னான். உடனே அங்கு உள்ன பெரிய பிரபுக்கள் தங்களிடம் உள்ள அதிக விலை மதிப்புள்ள ரெத்தினங்களையும் முத்துமாலைகளையும் கொண்டுவந்து ஒவ்வொருவர்களாக எரிவாயில் எரிந்தார்கள். ஆனால் பலன் ஒன்றும்கிட்டவில்லை அதற்கு பதில் அதிகமாகவே எரிய ஆரம்பித்தது. உடனே அங்கு உள்ளவர்கள்கூடி பூசாரி தங்களையேமாற்றியதுடன் தங்கள் அரிய விலை மதிப்புள்ள பொருள்களையும் இழக்க செய்துவிட்டானென்று மிகுந்த கோபங்கொண்டு அந்த கிழவனை பிடித்துக்கட்டி அவனை

தூக்கி எரிவாயின் பெரிய துவாரத்தில் போட்டுவிடமுயன்றார்கள். அது சமயம் வெகுதூரத்தில் இருந்து ஒரு இளம் வீரன் தன் அன்பிற்கு உரிய உயர்ந்த ஜாதிக் குதிரை ஒன்றில் உள்ளாசமாக சவ்வாரிசெய்துகொண்டு கூட்டத்தை நோக்கி விரைந்துவந்தான் அவனைக்கண்டதும் அங்குஉள்ள ஜனங்களெல்லாம் விலகி வணக்கம் செய்தார்கள். அந்தயுவன் துரிதமாக குதிரையைவிட்டு குதித்து கிழவன் கட்டுக்களை அகற்றி அவனை விடுதலை செய்து, என்ன நடந்தது என்பதை விபரமாக விசாரித்தான். அங்கு நடந்தவிபரம் தெரிந்த அந்த யௌவன இளைஞன் அங்கு கூடியுள்ள அனைவரை யும் நோக்கி அன்புமிக்க எண்ணறிய குடிமக்களே உங்கள் செயல் களைக்கண்டு நான் வருந்துகிறேன். தெய்வவாக்கு எப்போதும் பொய்த்துப்போவதில்லை அது நிச்சயமாக நிறைவேறும். இதில் நம்பிக்கையற்ற நீங்கள் உங்களுக்கு அரிய பொருள் எதோ அதை காணிக்கையாக கொடுக்க மனம் இசையாது கேவலம் அற்ப நவ ரெத்தினங்களை காணிக்கையாக சமர்ப்பித்தால் அதிக சக்தி பெற்ற இந்த அக்கினிவேகத்தின் வீரம்தனியுமா அதை தனியவைக்க வேண்டுமானால் உங்களில் யாராவது சிறந்த வீரன் தனக்கு அருமை யான அரிய பொருளான தன் உயிரையே அதற்குக் காணிக்கையாக செலுத்த முன்வரவேண்டும். அப்போதுதான் இதன் வேகம் தனிந்து அமருமென்றான்.

இதைக்கேட்ட அங்குள்ள மக்கள் அனைவோர்களும் இடி யோசைகேட்ட நாகம்போல் பயந்து நடுங்கி தலைகுனிந்து மௌன மானார்கள். இதை கண்ட அந்த பாலியயுவனான இளவரசன் புன்னகைசெய்து சிரித்துக்கொண்டு பாய்ந்து ஏறினான் தன்குதிரை மீது அடுத்தவினாடி குதிரை பாய்ந்து மலைமீது ஏரியது மறுவினாடி அந்த இலங்காளை அன்பின் உருவம் ஆவேஷமாக தன வீரக் குதிரையுடன் அந்தக்கொடிய நெருப்பின் வாயின்வழிகளாக நிலையான அன்பின் சொர்க்கத்தை அடைந்துவிட்டான். நெருப்பும் அமர்ந்தது ஊர்களும் ஊர் ஜனங்களும் பிழைத்தது. இதுதான் பேர்அன்பான உண்மை அன்பு, இதை நாம் பின்பற்றி வெற்றி பெற்று அன்பின் நாதத்தை நாம் நாடுயெங்கும் ஓங்கச் செய்வோமாக. "அன்பு ஓங்குக"

சுபம்! சுபம்!! சுபம்!!